**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No. C.C.No. 04/2026**

**Deposition of Witness for Petitioner PW2(LW2)**

| | | |
|---|---|---|
| **Name** | : | **சுரேஷ்** |
| **Father's Name** | : | **குமரேசன்** |
| **Village** | : | **சானார் பாளையம்** |
| **Taluk** | : | **பரமத்தி வேலூர்** |
| **Calling** | : | **2ம் நிலைக் காவலர்** |
| **Age** | : | **34** |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**22.06.2026** **Witness Signature :**

**எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**முதல் விசாரணை 11.55 A.M**

1. நான் தற்போது கோத்தகிரி காவல் நிலையத்தில் 2ம் நிலைக் காவலராக பணி செய்து வருகிறேன். நான் கடந்த 26.01.2026ம் தேதி நிலைய அலுவலில் இருந்தபோது, காவல் ஆய்வாளரின் உத்தரவுப்படி தலைமை காவல் 128– திரு. சுகுமார் மற்றும் முதல்நிலைக் காவலர் 2397– திரு. ஷிபு ஆகியோர்களுடன் மதுவிலக்கு சூதாட்டம் குற்ற தடுப்பு சம்பந்தமாக நிலையம் விட்டு புறப்பட்டு ரோந்திலிருக்கும்போது பாண்டியன் பார்க், ஒரசோலை, வெஸ்ட் புரூக், கட்டபெட்டு ஆகிய இடங்களில் ரோந்து செய்து கொண்டிருந்தபோது, தலைமைக் காவலருக்கு

ரகசிய தகவலாளி கொடுத்த தகவலின்பேரில், சுமார் 19.00 மணிக்கு கட்டபெட்டு பஜாருக்கு சென்றபோது, அங்கு சந்தேகத்திற்கு இடமான வகையில் வெள்ளை நிற துணிப்பையுடன் நின்று கொண்டிருந்தவரை விசாரித்தபோது, அவர் தன் பெயர் பரித்கான், வயது 31, த.பெ. ஷேக் தாவுத், 91– பள்ளி வாசல் தெரு, மேலூர், மதுரை மாவட்டத்தை சேந்தவர் என்று கூறியவரை, தலைமை காவலர் விசாரித்தபோது, அவர் அந்த துணிப்பையில் அரசு மதுபாட்டில்களை பொது மக்களுக்கும், இளைஞர்களுக்கும் கள்ளச் சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக, வைத்திருந்தார்.180 மி.லி பிடிக்கக்கூடிய 4 எக்ஸ்பிரஸ் பிராந்தி பாட்டில்கள் மற்றும் 180 மி.லி பிடிக்கக்கூடிய 12 சீமன்ஸ் பிராந்தி பாட்டில்கள் ஆகியவற்றை ஆஜர் செய்தார்.

2. பின்னர் தலைமை காவலர் அவர்களிடம் மதுபாட்டிகளை விற்பனை செய்ய உரிமம் உள்ளதா என்று கேட்டார். அதற்கு அந்த நபர் உரிமம் இல்லை என்று சொன்னதால், அதே இடத்தில் வைத்து 19.15 மணியளவில் கைது செய்து, எதிரி ஆஜர் செய்து, 16 பிராந்தி பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து, கைப்பற்றினார். பொது ஜன சாட்சிகள் யாரும் சாட்சியாக இருக்க முன்வராததால், அதற்கு நானும் முதல் நிலைக் காவலர் ஷிபும் சாட்சியாக கையொப்பம் இட்டோம் . தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2வது கையொப்பம் என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2வது கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.2 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. எங்கள் முன்பாக கைப்பற்றிய பிராந்தி பாட்டில்களை காட்டினால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். தற்போது என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 ஐதான்

தலைமைக் காவலர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். பின்னர் 20.00 மணியளவில் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து, எதிரியின் மீது தலைமை காவலர் வழக்குபதிவு செய்தார். அதற்கு நான் உதவியாக இருந்தேன். தலைமை காவலர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

1. நான் ரோந்திற்கு செல்லும்போது ரோந்து புத்தகம் பயன்படுத்துவோம் என்றால் சரிதான். அந்த புத்தகம் காவல் நிலையத்தில் இருக்கும். ரோந்திற்கு நான் எத்தனை மணிக்கு, எப்படி சென்றேன் என்ற விபரத்தை தலைமைக் காவலரின் விசாரணையில் நான் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. எதிரி வெள்ளை நிற பையை எந்த கையில் எந்த நிலையில் வைத்திருந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான், கையில் வைத்திருந்ததாக கூறியுள்ளேன். கைப்பற்றுதல் மகஜரிலுள்ள பாட்டில்களின் வரிசை எண் தெரியுமா என்றால் தெரியாது. வெள்ளை நிற பையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். கட்டபெட்டு என்பது பெரிய பகுதி என்று சொன்னால் சரிதான். அதில் எதிரியானவர் எங்கே வைத்து மதுவை விற்பனை செய்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். தலைமைக் காவலர் சம்பவ இடத்தை புகைப்படம் எடுத்தார். தமிழ்நாடு மதுவிலக்கு தடுப்பு சட்டத்தின்படி ஒரு நபர் 4.5 லிட்டரை மட்டும்தான் கையில் வைத்திருக்கலாம் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அன்றைய தினம் விடுமுறை தினம் விடுமுறை என்பதால் எதிரி மதுபாட்டிகளை கையில் வைத்திருந்தார். நான் எந்த விதமான ரோந்தும் செய்யவில்லை என்றாலும், தலைமைக் காவலரின்

வேண்டுகோளின் படி புள்ளிவிவரக் கணக்கிற்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/- G. Amirdham, 22.06.2026**

**Judicial Magistrate,**
**Kotagiri**

**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No. C.C.No. 04/2026**

**Deposition of Witness for Petitioner PW3(LW3)**

| | | |
|---|---|---|
| **Name** | : | **சுகுமார்** |
| **Father's Name** | : | **சுப்பையா** |
| **Village** | : | **கோத்தகிரி** |
| **Taluk** | : | **கோத்தகிரி** |
| **Calling** | : | **தலைமைக் காவலர்** |
| **Age** | : | **45** |

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**22.06.2026** **Witness Signature :**

**எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**முதல் விசாரணை 11.55 A.M**

1. நான் தற்போது கோத்தகிரி காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணி செய்து வருகிறேன். நான் கடந்த 26.01.2026ம் தேதி நிலைய அலுவலில் இருந்தபோது, காவல் ஆய்வாளரின் உத்தரவுப்படி நானும், என்னுடன் முதல்நிலைக் காவலர் 2397–திரு. ஷிபு மற்றும் 2ம் நிலைக் காவலர் 583– திரு. சுரேஷ் ஆகியோர்களுடன் மதுவிலக்கு சூதாட்டம் குற்ற தடுப்பு சம்பந்தமாக நிலையம் விட்டு புறப்பட்டு ரோந்திலிருக்கும்போது பாண்டியன் பார்க், ஒரசோலை, வெஸ்ட் புரூக், கட்டபெட்டு ஆகிய இடங்களில் ரோந்து செய்து கொண்டிருந்தபோது,

எனக்கு கிடைத்த ரகசிய தகவலாளி கொடுத்த தகவலின்பேரில், சுமார் 19.00 மணிக்கு கட்டபெட்டு பஜாருக்கு சென்றபோது, அங்கு சந்தேகத்திற்கு இடமான வகையில் வெள்ளை நிற துணிப்பையுடன் நின்று கொண்டிருந்தவரை விசாரித்தபோது, அவர் தன் பெயர் பரித்கான், வயது 31, த.பெ. ஷேக் தாவுத், க.எண்.91, பள்ளி வாசல் தெரு, மேலூர், மதுரை மாவட்டத்தை சேந்தவர் என்று கூறியவரை, நான் மேலும் விசாரித்தபோது, அவர் அந்த துணிப்பையில் அரசு மதுபாட்டில்களை பொது மக்களுக்கும், இளைஞர்களுக்கும் கள்ளச் சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக, வைத்திருந்தார். சுமார் 180 மி.லி பிடிக்கக்கூடிய 4 எக்ஸ்பிரஸ் பிராந்தி பாட்டில்கள் மற்றும் 180 மி.லி பிடிக்கக்கூடிய 12 சீமன்ஸ் பிராந்தி பாட்டில்கள் ஆகியவற்றை ஆஜர் செய்தார்.

2. பின்னர் நான் அவர்களிடம் மதுபாட்டிகளை விற்பனை செய்ய அரசு உரிமம் உள்ளதா என்று கேட்டதற்கு, அந்த நபர் உரிமம் இல்லை என்று சொன்னதால், அதே இடத்தில் வைத்து 19.15 மணியளவில் மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதல்களை பின்பற்றி எதிரியை கைது செய்தும், எதிரி ஆஜர் செய்து, 16 பிராந்தி பாட்டில்களை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து, கைப்பற்றினேன். பொது ஜன சாட்சிகள் யாரும் சாட்சியாக இருக்க முன்வராததால், அதற்கு இரண்டாம் நிலைக்காவல் சுரேஷ் மற்றும் முதல் நிலைக் காவலர் ஷிபும் சாட்சியாக கையொப்பம் பெற்றேன். தற்போது என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜர் நான் தயார் செய்தது தான். கைப்பற்றுதல் மகஜர் ஏற்கனவே **அ.த.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் அ.சா.பொ.1 ஐ தான் நான் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். பின்னர் 20.15

மணியளவில் எதிரி மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து, எதிரியின் மீது நான் நிலையக் குற்ற எண். 22/2026 சட்டப்பிரிவுகள் 4(1)( C) TNP கீழ் வழக்குபதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு வழக்கு சொத்தை நீதிமன்றத்திற்கு படிவம் 91 மூலமா அனுப்பி வழக்கு சொத்து எண்.04/2026 பெற்றேன். **அந்த படிவம் 91 அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் ஆஜர் எதிரி செய்த குற்றம் பிணையில் விடக்கூடிய குற்றம் என்பதால், இருநபர் ஜாமின்தாருடன் காவல் நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் சாட்சிகள் ஷிபு மற்றும் சுரேஷை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

1. நான் ரோந்திற்கு செல்லும்போது ரோந்து புத்தகம் பயன்படுத்துவோம் என்றால் சரிதான். அந்த புத்தகம் காவல் நிலையத்தில் இருக்கும். ரோந்திற்கு நான் எத்தனை மணிக்கு, எப்படி சென்றேன் என்ற விபரத்தை முதல் தகவல் அறிக்கையிலோ, இறுதி அறிக்கையிலோ நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் சம்பவ இடம் கட்டபெட்டு பஜார் என்று கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். சம்பவ இடம் பொது மக்கள் அதிகம் இருக்க கூடிய பகுதிதான். எதிரி வைத்திருந்த வெள்ளை நிற பையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதாக கூறியுள்ள நிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பெற்வில்லை என்று சொன்னால்

சரிதான். கைப்பற்றிய மதுபான பாட்டில்களை இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பி அறிக்கை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். நான் சம்பவ இடத்தை புகைப்படம் எடுதேன் என்றால் சரிதான். நான் எந்த விதமான ரோந்தும் செய்யவில்லை என்றாலும், புள்ளிவிவரக் கணக்கிற்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/- G. Amirdham, 22.06.2026**
**Judicial Magistrate,**
**Kotagiri**